1981 ஆகஸ்ட் 31]

திரு. அ. ரகுமான்கான் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''1981-ஆம் ஆண்டு மதுரை—காமராசர் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, '' 1981 ஆம் ஆண்டு மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ) பார்வையாளர்கள் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு— இன்று (31-8-81) காலை சுமார் 11.50 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பிய,

(1) திரு. பரமன் (பி. டி. ராமு மகன்)

(2) திரு. சி. ராமகிருஷ்ணன் (சிதம்பரம் பிள்ளை மகன்)

ஆகிய இருவரும் தற்போது பேரவைக்காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள். அவர்களது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இவருக்கு அனுமதிச் சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு ப. பொன்னுரங்கம் அவர்களின் பரிந்துரையின் மேல்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டுவருவார்கள்.